International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 06 Issue: 03 July to September 2024 www.irjtsjournal.org

# சங்ககாலப் பெண்பாற் புலவர் பாடல்களில் நாடகக் கதைக்கோப்பு

முனைவர் ரா.ரங்கநாதன்
*உதவிப்பேராசிரியர்*
*தமிழ்த்துறை*
*கொங்குகலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)*
*ஈரோடு - 638 107*

**ஆய்வுச் சுருக்கம்**

*சங்ககால மக்களின் வாழ்க்கை முறைகளையும் பண்பாட்டுக் கூறுகளையும் அள்ளித்தரும் அட்சயப்பாத்திரங்களாய் விளங்கும் சங்க இலக்கியங்கள் ஒவ்வொன்றும் கருத்துச் செறிவிலும், கவிதை நயத்திலும், கதைக்கூறும் முறையிலும்; சிறந்தபடைப்பாக விளங்குகின்றன. அக்காலத்தில் ஆணும் பெண்ணம் சம உரிமைப் பெற்றிருந்தனர் என்பதை பெண்பாற் புலவர்களைக் கொண்டு அறியமுடிகிறது. இப்பெண்பாற்புலவர் பாடல்களில்; பெண்ணியச் சிந்தனைகளையும், ஆண்மகனின் ஒழுகலாறுகளையும் மரபுவழியின்று வழுவாமற்பதிவு செய்துள்ளனர். சங்கப்பாடல்கள் ஒவ்வொன்றும் தன்னளவில் கட்டமைப்புடைய சின்னஞ்சிறு நாடகவடிவம் கொண்டதாகையால் காதற்கதையின் நிகழ்ச்சிகளையும், கதைச்சூழலையும் ஆராயுமிடத்து நாடகக்கதைக் கோப்பிற்கு உரியகதைக்கூறும் பாங்கில் சங்ககாலப் பெண்பாற்புலவர் பாடல்கள் திகழ்வதை இவ்வாய்வின் நோக்கம் ஆகும்.*

**முன்னுரை**

சங்ககாலத்தில் காதலையும், வீரத்தையும் பாடுபொருளாகக் கொண்டு பாடல்கள் இயற்றியுள்ளனர் புலவர் பெருமக்கள். அறம், பொருள் இன்பம் வீடடைதல் நுற்பயனே என்பது தமிழர்தம் கொள்கை. இந்நான்கையும் அகம், புறம் என்ற இரண்டனுள் அடக்கிகவிபாடி மகிழ்ந்தனர். இப்புலவர் பெருமக்களுள் ஆண்புலவர்களுக்கு இணையாக பெண்புலவர்களும் கவிதைபாடியுள்ளனர் என்பதை அறியும் போது அக்காலத்தில் பெண்களுக்கு அளிக்கப்பட்ட மதிப்பும், மரியாதையையும் கல்வியுரிமையையும்; அறியமுடிகின்றது. உலகம் வியந்து போற்றக்கூடிய அளவிற்கு சிறந்து விளங்கிய சங்கப்பெண் பாற்புலவர்கள், தற்காலத்தில் பெண்கவிஞர்களின் வளர்ச்சிக்கு வித்திட்டவர்கள்எனலாம்.


© 2024, IRJTSR

ஆண்பாற்புலவர்களை விட எண்ணிக்கையில் குறைந்து காணப்பட்டாலும் அவர்களின் பாடல்களில் காணப்படும் சொற்சுவையும், பொருட்சுவையும், கருத்தின் ஆழமும்நம்மிடம் நீங்கா இடம் பெற்றுத்திகழ்கின்றன. இத்தகு பெருமைவாய்ந்த பெண்புலவர்களின் பாடல்களில் அகப்பாடல்களில் கதை நிகழ்ச்சிகள் அமையும் போக்கை "சங்ககாலப் பெண்பாற்புலவர் பாடல்களில் நாடகக்கதைக்கோப்பு" எனும் பொருண்மையில் இக்கட்டுரை நோக்கப்படுகிறது.

**நாடகக்கவிதை**

பெண்பாற்புலவர் பாடல்கள் , சங்க இலக்கிய நுற்களான எட்டுத்தொகையில் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகிய ஐந்திலும், பத்துப்பாட்டில் பொருநராற்றுப்படையில் மட்டுமேகாணப்படுகின்றன. தன்னுணர்ச்சி மிக்க சங்கப்பாடல்கள் ஒவ்வொன்றும் ஓர்காதற்கதையின் கருவினைத்தாங்கிப், படிப்பவர்மன அரங்கில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வகைப் பாடல்கள் நாடகக்கவிதை எனும் பண்பை பெற்றுத்திகழ்வதை உணர்ச்சி மிகுந்த கூற்றுக்கள் வரியிலாகத்தலைவன் தலைவி வெளிப்படுத்துவதை அறிய முடிகின்றது. நாடகப்பாடல்கள் குறித்து மு.வரதராசனார்,

சங்க இலக்கியத்தின் அகப்பாடல்களில் தலைவன், தலைவி, தோழி

முதலானவர்களின் செயல்களை அவர்களின் கூற்றுகள் வாயிலாகவும்,

அனுபவங்கள் வாயிலாகவும் புலவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

முதற்பொருளான நிலமும் பொழுதும், விலங்கு, பறவை, தொழில்

உணவு, தெய்வம், யாழ் போன்றகருப்பொருள்களும் ஐ வகைநிலத்தின்

கண்நிகழும் புணர்தல், பரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் ஆகிய

உரிப்பொருள்களும் அரங்கில் ஏற்படுத்தும் உணர்ச்சி செயற்பாடுகள்

அமைந்தசங்கப் பாடல்களே நாடகப்பாடல்கள்1

என்பர் மு.வரதராசனார். இதனை மார்கப்பந்துசர்மா என்பவரும்

தொடர்புள்ள பல நிகழ்ச்சிகளையும் அவற்றின்

விளைவையும் புனையும் சங்கப்பாடல்களை


© 2024, IRJTSR

'நாடகக்கவிதை| என்றுக்கூறலாம்.2'

என்றுக்கூறுவர்.

**கதைக்கோப்பு**

நாடகக்கூறுகளில் முதன்மையானது கதைக்கோப்பு ஆகும். கதைக்கோப்பு என்பது நிகழ்ச்சிகளின் தொடர்ச்சியைக் குறிப்பாதாகும். நிகழ்ச்சிகள் ஒன்றுக்கொன்று தொடர்பு படுத்தியும் அவற்றைக்காரணகாரிய (உயரளநயனெநககநஉவள) முறையில் அமைக்கும் திறத்திலும் கதைக்கோப்பு உருவாகிறது.

கதைக்கோப்பு என்பதை முரணாகிய முடிச்சுப்பிணித்து

அவிழ்க்கும் நிகழ்ச்சியின் ஒழுங்கு முறை என்பார்4

கதைக்கோப்பிற்கும் கதைக்கும் உள்ள வேறுபாட்டை,

அரசன் இறந்தான்; அதன் பிறகு அரசி இறந்தார்.- இது கதை.

அரசன் இறந்தான், பின்பு வருத்தமிகுதியால் அரசியும் இறந்தாள்.

- இது கதைக்கோப்பு என்று இ.இ.பாஸ்டர் என்பவர் குறிப்பிடுவதாக தா.ஏஞானமூர்த்தி விளக்குகிறார்.5

**நாடகத்தில் கதைக்கோப்புவகைகள்**

ஒரு நாடகத்திற்கான கதைக்கோப்பு ஐந்து நிலைகளாகப் பகுக்கப்பெறுகிறது. அவை பாத்திர அறிமுகம் தொடங்கி, அவர்களைத்தொடர்ந்து படிப்படியாக வளர்ச்சி; பெறுகிறது. இவ்வளர்ச்சி ஏதேனும் ஒரு சிக்கலைமைய மிட்டு உச்சம் அடைகிறது. இதனைக்கடந்து கதை நிகழ்ச்சிப்போக்கு முடிவை நோக்கிச் செல்லும் பகுதியே வீழ்ச்சி ஆகும். முடிவை நோக்கிய இன்பம், துன்பம் இரண்டில்; ஒரு முடிவு காணப்படும். இதனை செர்மானி நாட்டுத்திறனாய் வாளராகியகுஸ்டாவ்பிரேடாக் (புரளவயஎகுசநபவயப) என்பவர் நாடகக்கதைக்கோப்பை ஐந்து வகையாகப் பிரிக்கிறார்.

1) அறிமுகம் அல்லது தொடக்கம்

2) வளர்ச்சி

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்
© 2024, IRJTSR 

3 உச்சம்

4) வீழ்ச்சி

5) விளைவு அல்லது முடிவு

6) இதனைநாடகவியலார்,

என்றுமுகம், பிரிதிமுகம், கருப்பம், விருப்பம், துய்த்தல் என ஐந்து வகையாகக் குறிப்பிடுகின்றார்.

**இலக்கியத்தில்கதைக்கோப்பு**

மக்களினத்தில் ஆணும் பெண்ணும் காதலராய் அன்பாற்பிணைந்து நடத்தும் இல்வாழ்க்கையில் இருவரும் கணவன் மனைவியராகி வாழ்வதற்குரிய அமைதி கூறுவது அகத்திணை ஆகும். இவ்வக இலக்கியத்தில் கதைக்கோப்பு அமைப்பு இயற்கைப்புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், பாங்கியற்கூட்டம், தோழியின் முயற்சி, பகற்குறி, இரவுக்குறி, வரைவுக்கடாதல், வரைவுநீடல், வரைவின் பொருட்டுபிரிவு, அறத்தொடுநிற்றல், உடன்போக்கு, மணமனைநிகழ்ச்சி, பரத்தையர்பிரிவு என்ற நிலைகளில் அமைந்து காணப்படுகின்றன.

**அறிமுகம்**

கதைமாந்தர்கள் அறிமுகம். இரண்டு உணர்ச்சிகளுக்கிடையே ஏற்படும் மோதல்காரணமாகத் தோன்றும் முரண் ஆகும். தலைவன் முதன்முதலாகத் தலைமகளைக் கண்டு காதலுறுவதும் அது பற்றித்தலைவன் தன் நண்பனொடு கலந்து தெளிவுறுதலும், பின்பு அவளைமுன்பு கண்ட விடத்தே கண்டுதன் காதலைப்புலப் படுத்துவதும், அவளுடைய குறிப்பின் வழிச்சென்று அவளது உயிர்த்தோழியை அறிந்து அவள் உதவி பெற்றுத்தலைவியொடு ஏற்படுத்திக் கொண்ட காதலுறவை வளர்த்துக்கொள்ளல்; என அவ்வொழுக்கம் இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், தோழியற்கூட்டம் நான்கு வகைப்படும்.

**வளர்ச்சி**

தலைவன் தலைவியைச் சந்திப்பதும் காமுறுவதுமாகிய பாடல்கள் பெண்பாற்புலவர் பாடல்களில் காணப்பெறவில்லை. பாங்கன் கூட்டம் நிகழ்த்தும் துறையும் இல்லை. பாங்கற்கூட்ட வகையில் தலைவன் தான் எய்திய காதலைப்பாங்கனிடம் உரைப்ப, அவன் இசையாது மறுத்தானாகத் தலைவன்

அவற்றுக்கு விடை கூறுவதாக வரும் துறைப்பகுதியே முதலாவதாகக் காணப்படுகிறது. ஞாயிறு கதிர்பரப்பும் வெம்மைவாய்ந்த பாறையில் கையிழந்த ஊமையன் தன் கண்ணாகக்காக்கும் வெண்ணெய் அவன் கட்டுக்குள் நில்லாமல் உருகியது போல் எனக்குள் பரவியகாமநோயைப் பொறுத்துக் கொண்டு நீக்குதல் அரிது என

இடிக்கும் கேளிர்! நும் குறை ஆக

நிறுக்கல் ஆற்றினோ நன்றுமன் தில்ல்

ஞாயிறு காயும் வெவ்அறை மருங்கில்

கைஇல் ஊமன் கண்ணின் காக்கும்

வெண்ணெய் உணங்கல் போலப்

பரந்தன்று இந்நோய், நோன்று கொள்வதற்கு அரிது! (குறு: 58)

என்ற பாடல்வழி வெள்ளி வீதியார் தலைவன் தன்காம நோயின் அருமையை கதைக்கோப்பிற்கான வளர்ச்சியாகக் குறிப்பிடுகின்றார்.

**தோழியற்கூட்டம்**

தலைவன் தலைவியைக் கூட்டு விக்க வேண்டு வது ஆகும். தோழியிடம், தலைவி எனக்குக் கிட்டாமல் போனால் ஏற்படும் விளைவைத் தலைவன் உரைப்பதாக அமைகிறது. இவ்வின்பம் கிட்டாமல் பிரிவு நேருமாயின் அவளையே நினைந்து நான்பனை மடலால் செய்தகுதிரையின் மீது ஏறித் தெருவில் நின்றாலும் அவளுக்குத்தான் பழி; அப்படியே நான் அவலத்தில் உயிர்வாழ்வதாலும் எனக்கும் பழியையேத்தருவதாக,

பொழுது இடை தெரியின் பொய்யேகாமம்,

மா என மடலொடுமறுகில் தோன்றித்

தெற்றெனத் தூற்றலும் பழியே;

வாழ்தலும் பழியே பிரிவு தலைவனே. (குறுந். 32: 3-6)

என்று அள்ளூர் நன் முல்லையார் பாடுகின்றார். பெண்ணொருத்தியின் மீது புதுக்காதல் கொண்ட இளந்தலை மகன் மறுத்த வழி அடைந்த மன வேதனையை இப்பெண்புலவர் பாடியுள்ளார்.

## தோழியின் முயற்சி

வருமுலையாரித்தி என்ற புலவர் தலைவன் தோழியிடம் வேண்டத்தோழி, தலைவியிடம் அவனது துயரத்தையும், மன நிலையையும் குறைநயப்ப எடுத்துக்கூறும் பாடலாக குறிப்பிடுகின்றார். ஒரு நாள் இரு நாள் வந்தவனல்லன், பல நாள்கள் வந்து பணிமொழி பேசி எனது நல்ல நெஞ்சத்தை நெகிழச்செய்த தலைவன் வரவில்லையே அதனால் வேறுபுலங்களையுடைய நல்ல நாட்டினில் பெய்த இடியோசையுடன் கூடியமழை, கலங்கிவருவது போல் எனது மனமும் அமைதியற்று அவன் நினைவில்கலங்குகின்றது எனத்தோழி உரைப்பதாக,

ஆசு ஆகு எந்தையாண்டு உளன்கொல்லோ?

வேறு பலன் நல்நாட்டுப்பெய்த

ஏறுடைமழையின் கவிழும் என் நெஞ்சே (குறுந்.176:5-7)

என்று பாடுகிறார். பெண்ணொருத்தியின் கூற்றைப்பெண் பாலார்பாடுவது பொருத்தமாகவுள்ளது.

## உச்சம்

முரண் பட்ட இரண்டு ஆற்றல்களும் தத்தம் வலிமையைத் தொடர்ந்து சம நிலையில் செலுத்த முடியாது. உச்சம் இயற்கையாகவும் முன் நிகழ்ச்சிகளின் விளைவாகவும் தோன்றும். இலக்கிய நிலையில் உச்சமாக தலைவன் தலைவியின் காதல் வாழ்க்கை வளர்ந்து இருவரும் சந்திக்கும் இடங்களாக, இரவுக்குறி, பகற்குறியும் அமைகிறது.

## இரவுக்குறி

ஊராவர் தெருவில்விழாவயற்கின்ற பொழில்களில் ~தாம் அமர் துணையொடுவண்டுஇமிரும், யானேபுலம்புகொள் அவலமொடு கண்படையிலனே. இதனால் நிலவும் ஊரும் பிறவும் கலந்த உலகம் என்னோடு பொருங்கொல் உறக்கங்கள் கொள்ளாமல் உலகமொடு பொருங்கொல் என் அலவுறு நெஞ்சே என்று மொழிகின்றாள்

நிலவே, நீல்நிறவிசும் பில்பல் கதிர்பரப்பி

பால்மலிகடலின், பரந்துபட்டன்றே;

ஊரே ஒலி வரும் சும்மையோடு மலி தொகுபு, ஈண்டிக்,

கலிகெழுமறுகின்விழவு அயரும்மே; (நற். 348: 1-4)

என்ற பாடல் வழி தலைவி தோழிக்கு உரைப்பாளாய் நிலவோ பாற்கடற் போல் பரந்து விளங்குகிறது எனத் தலைவி, இரவில் தலைவனைக் காணமுடியாமல் ஊரார்விழித் திருந்து தடுப்பதாகப்புலம் பும்பாடலாக அமைகிறது.

**பகற்குறி**

காதல் பெருக்கெடுத்துப் பகற்காலத்தில் இருவருமே பிறர்தெரிந்து கொள்ளாத படிமறைந்திருந்து உரையாடி இன்புறுவதற்கு என்றுகாணப்படும் இடம் பகற்குறி எனப்படும். இக்குறியிடம் கண்டுகூடு மிடத்து இருவரும் தம்முள் பேசிக்கொள்வது பொருளாகப்; பாடல்கள் இல்லை. குறியிடம் பற்றித்தலைவனும் தோழியும், தோழியும் தலைவியும் பேசுவன பொருளாகக் கொண்டே பாடுகின்றனர். காதலரோடு நாம் இனிமையாக இருந்து விளையாடிய இக்கடற்கரைச் சோலையானது நமக்கு இனி எவ்வாறு அமையுமோ? என்று

நெய்தல் கூம்ப, நிழல்குணக்கு ஒழுக,

கல்சேர்மண்புலம் சிவந்து நிலம் தணிய

பல்பூங்கானலும் அல்கின்றறன்றே;

இனமணி ஒலிப்பப், பொழுதுபடப்பூட்டி......(நற். 187:1-4)

என்ற பாடல் வழி பகற்குறியை எண்ணி ஏங்கியத்தலைவி அவனொடு விளையாடி மகிழ்ந்தகானற் சோலையும், அவன் நீங்குதற்குக் காரணமாகிய மாலைப்பொழுதின் கழிவும் அவள் நெஞ்சைக் கவலையுறச்செய்வதாக இப்பாடல் அமைகிறது.

**வரைவுகடாதல்**

பகற்குறிக் கூட்டம் தொடர்ந்து நடைபெறின்களவு வெளிப்படும் என்ற அச்சத்தால் தலைவன் வரவுதடைப்படும். அதனால் காணும் பொழுதிலும் காணாப்பொழுது மிகுதியாகும். அதனைப்பெறாத தலைமகள் உள்ளம் வருந்திமேனி

வேறுபடுவள். அதனை உணரும் தோழி, இவ்வேறுபாடு பிறர் அறிய புலப்பின் விளைவுவேறாகும் என்று கருதி, தோழி தலைவனை திருமணத்திற்கு வற்புறுத்தப்படுவதாக் பூங்கண் உத்திரையார் பாடுகின்றார் (குறுந்;. 48). தலைமகன் வருவது கண்ட தோழி அவனைத்தனியிடத்தே நிறுத்தி காதல் ஒழுகலாற்றை அன்னை அறிந்து இல்லத்தில் அடைத்து விட்டாள். இதனால் எங்கள் இளநலம் முதிர்ந்து கழிகிறது என்றுக் கூறி தலைவன் அறிவை நன்குத்தூண்டுவதாக ஔவையாரும் (நற்-295) தோழிகூறுவதாகப் பாடுகின்றனர்.

### வரைவு நீடல்:

அறம்புரிதல், பொருளீட்டல், நாடுகாத்தல், பகை கெடுத்தல் முதலிய உலகியல் வாழ்க்கைக்குரிய கடமைகளை உடையவன் தலைவன். வரைதற்குரிய முயற்சிகள் மேற்கூறியகடமைகளால் இடையீடு வருவது வரைவு நீடல் ஆகும். இதனை நல்வெள்ளியார் (குறுந் - 365) ஆம்பாடலில் குறிப்பிடுகிறார். தலைவன் வரையாது நீட்டித்ததற்கு; காரணம் அறிய வேலனைக் கொண்டு கழங்குவைத்து அறிவோமா எனத் தலைவிக்குத் தோழி கூறுவதாக

நாறுகொள் பிரசம்ஊது நாடற்குக்

காதல் செய்தலும் காதலம் அன்மை

யாதெனிற் கொல்லோ? தோழி! வினவுகம்,

பெய்ம்மணல் முற்றம் கடி கொண்டு

மெய்ம்மலிகழங்கின் வேலற்தந்தே. (நற். 268: 5-9)

என்னும் வெறிபாடியகாமக் கண்ணியார் பாடுகின்றார். இவ்வாறு தலைவியை உறவினர், ஊரார்பயமின்றி அடைய திருமணமே சரி என்று சிறைப்புறமாக நிற்கும் தலைவனுக்கு உணர்த்தத்தோழியும், தலைவியும் நடத்தும் நாடகத்தைப்பெண் பாற்புலவர்கள் பதிவுசெய்திருப்பது கொண்டு அப்புலவர்களின் ஆளுமைத் பண்பை அறிய முடிகிறது.

### வரைவின் பொருட்டு பிரிவு

காதலொழுக்கம் பூண்டதலைவன் பொருள் காரணமாகவும் வேறு பல கடமைகள் காரணமாகவும் பிரிந்த விடத்து தலைவிக்கு பிரிவு ஆற்றாது தீமையே விளைவிக்கும். அவருடைய மேனியும் நிறம் பசந்துமெலிவு எய்தும் நிலையில்

அவள்தனது ஆற்றாமையைத் தோழிக்கும் கூறுவாள். வரைவின் பொருட்டு பரிந்த தலைவன் வராமையினால் தலைவியன் நிலைவருத்தத்திற்கு உரியதாக மாறுவதாகையால் குளத்தில் வீசப்பட்ட மீன்வலையில் விலங்கு தானே அகப்பட்டது போன்று வரைவிற்குரிய அயலவரின் முயற்சியினால் பயன் என்ன? என்றுகுறுந் தொகையில்

மீன்வலைமாப் பட்டாங்கு

இது மற்று எவனோ, நொதுமலர் தலையே (குறுந்.171:3.4)

என்னும் பாடல் வரிகள் உணர்த்துவதாக பூங்கண் உத்திரையர் குறிப்பிடுகிறார்.

**முடிவு**

தலைவியின் உடல் மாற்றத்திற்கு கட்டு விச்சியை அழைத்து வெறியாடல் நிகழ்த்திய அன்னையிடம் தோழி அவளதுகளவு வாழ்க்கையைக்கூறி அறத்தோடு நின்ற நிலையை

அன்னை அறியினும் அறிக அலர்வாய்

அம்மென்சேரி கேட்பினும் கேட்க:

பிறிது ஒன்று இன்மை அறியக்கூறி, (அகம். 110: 1-3))

என்னும் போந்தைப் பசலையார் பாடல்வழி அறியலாம். தோழியால் தலைவியின் களவுக்காதலுன்மை அறிந்த செவிலி, நற்றாய்க்கு அறத்தொடு நிற்கும் துறையில் ~செவிலிமகள் உடன் போக்கு சென்றதலைவியின்களவு வாழ்க்கையை நற்றாயிடம்

சேயிலை வெள்வேல்விடலையொடு

தொகுவளை முன்கை மடந்தைநட்பே (குறுந். 15: 6-7)

என ஔவையார் பாடுகின்றார்.

**உடன்போக்கு:**

கற்பொடு புணர்ந்த கௌவை எனப் பலத்திறமாகச் சான்றோர் வழங்குவர். தலைவிதலை மகனோடுபோவது தெரிந்து தேடிச் சென்றவருள் செவிலிமுது பெண்டாதலின், அவள் தலைவி சென்ற நெடியகாட்டின் வழி; போகின்றாள். எதிரே எண்ணிறந் தேர்வரக்கண்டு பெருவருத்த முற்றுப்புலம்புவதாக வெள்ளிவீதியார்

காலேபரிதப்பினவேகண்ணே

நோக்கி நோக்கிவாள் இழந்தனவே (குறுந். 44: 1-2)

பாடலொன்றில் பாடுகின்றார். ஔவையாரும் (குறுந். 388), உடன் போக்கில் நேரும் துன்பத்தைக் கூறும் தலைவனிடம் தோழி. 'உம்மோடு வந்தால் கானமும் இனிமையேபயங்கும்" என்று கூறுவதாகபாடுகிறார்.

**வரைவுமலிதல்:**

தோழி நம் கூட்டத்தினர் தண்டுடையகையினரும், நரைத்ததலையில் துணியை உடையவரும், நன்று நன்று எனக் கூறுகின்ற தலைவனைச் சார்ந்த மக்களொடு, இன்று வரப்பெற்றமையால் இந்நாள் சிறப்புடையதாக

அம்மவாழி, தோழி! நம்ஊர்ப்

பிரிந்தோர்ப் புணர்ப்பவர் இருந்தனர் கொல்லோ (குறுந். 146: 1-2)

என வெள்ளி வீதியார் திருமணம் பேசவந்த பெரியோரைச் சுட்டுகிறார். களவுகாலத்தில் பெரிய துன்பங்களையும் பொறுத்திருந்தீர் தலைவியுடன் கூட இனி எந்தத்தடையுமில்லை எனத்தோழி தலைவனுக்கு உரைத்ததாக,

அயிரைபரந்த அம் தண்பழனத்து

ஏந்து எழில் மலரதூம் படைத்திரள்கால்

ஆம்பல் குறுநர் நீர் வேட்டாங்கு இவள்

இடைமுலைக்கிடந்தும், நடுங்கல்ஆனீர் (குறுந்.178:14)

பாடல்வழி நெடும் பல்லியத்தையும் போன்ற பெண்பாற்புலவர்கள் மணம்முடிந்து, மனையில்நிகழும் நிகழ்ச்சிகள்குறித்துதம் பாடல்கள் வழி எடுத்துயம்புகின்றனர்.

**பொருள் வினைப் பிரிவு:**

அன்பாற் பிணிப்புற்றிருக்கும் தலை மக்களின் இன்ப வாழ்விற்கும் பிரிவு போலத் துன்பம் தருவது பிறிதில்லை. பிரிவு இன்றியமையாத விடத்துத் தலைவன், தலைவியின் ஆற்றாத்தன்மையை எண்ணித்தானே சொல்ல முடியாமல் தோழிவாயிலாக உணர்த்துவான்; தலைவி சில குறிப்புரைகளால் உய்த்துணரச் செய்வாள். மனைத்தலைவர்கள் தலைவியைப் பிரிந்து செல்வாரென்றும் அவர்வரும்

வரையும் அவள்மனையறம் புரிந்து கொண்டுதனித்து இருப்பார்; என்பதை ஔவையார்

பொம்மல் ஓதி! நம் இவண் ஒழியச்

செல்ப என்ப, தாமே: சென்று,

தம்வினை முற்றி வரூஉம்வரை, நம்மனை

வாழ்தும் என்ப, நாமே, அதன்தலைக் (நற். 129: 3-6)

பாடல்வழி விளக்குகிறார்.

### பரத்தையர் பிரிவு

தலைவி அதற்கு மறுப்புக்கூறிதன் நிலைக்குறித்துப் பேசுவதும் (குறுந்.202) அள்ளூர்நன் முல்லையார் பாடுகின்றார். நெடும் பல்லியத்தையும் (குறுந்.203) உன்னுடைய பரத்தையர் துயரம் தருகின்ற பழிச்சொற்களுடன் எம் முடன் வீதியில் இனிமேல் வரக்கூடாது என்று,

பைதற்பிள்ளைக்கிளை பயிர்ந்ததா அங்கு

இன்னாது இசைக்கும் அம்பலொடு

வாரல், வாழியர்! ஐயஎம்தெருவே. (குறுந்.139: 4-6)

என ஒக்கூர்மாசாத்தியார் பாடுகின்றார்.

### முடிவுரை

அகத்திணையில் தலைவன் தலைவிக்கும் இடையே ஏற்படும் அறிமுகம் தொடங்கி தோழி, பாங்கன் ஆகியோர்ன் முயற்சியின் ஊடேகாதல் வளர்ந்து, இரவுக்குறி, பகற்குறி ஆகியகுறிகளால் சந்திப்பு நேரும் நிலையில் திருமணம் செய்து கொள்ளவற்புறுத்து வது உச்ச நிலையாகும். இதனால் திருமணத்திற்காகப் பொருள்சேர்க்கும் பொருட்டு பிரிவு ஏற்படுவதும் பிரிவுதாங்காமல் தவிக்கும் மனநிலையும் வீழ்ச்சியாக அமைகிறது. முடிவில் தலைவியின்களவு வாழ்க்கை வெளிப்பட்டு அறத்தொடுநிற்றலும், தலைவன் தலைவியுடன் உடன் போக்கு மேற்க் கொள்வதும், திருமணம் முடிந்தலும், என்பன் முடிவாகக் காணப்படுகிறது. கற்பு வாழ்க்கையில் பொருள்வினைப் பிரிவும், பரத்தையர் பிரிவும் ஊடல் தீர்ந்து

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்
© 2024, IRJTSR 

சேர்த்தலும் முடிவாக அமைகிறது. இவ்வாறு பெண்பாற் புலவர் பாடல்கள் தனித்தனிப்பாடல்களாக அமைந்தாலும் அவை தொடர் நிகழ்ச்சிகளைக் கொண்டே காணப்படுகின்றன. இவ்வகையில் காரணகாரிய முறையில் கதை நிகழ்ச்சிகள் அமைந்து நாடகக் கூறானகதைக் கோப்பினைபாடல்களில் பதிவு செய்துள்ளமையை அறியும் போது இப்புலவர் பெருமக்கள் நாடக ஆளுமைத்தன்மை மிக்கவர்களாகப் போற்றப்படுகிறார்கள் என்பதை மேற்க்கண்ட வற்றான் அறிய முடிகிறது.

## அடிக்குறிப்பு

[1] பழந்தமிழ்இலக்கியத்தில்இயற்கை, மு.வரதராசனார். பக். 14

[2] குறிஞ்சிக்கலி, வழித்துணைவிளக்கம்முன்னுரை, எஸ்.ஆர். மார்க்கபந்துசர்மா.பக்.

[3] இலக்கியத்திறனாய்வியல், தா.ஏ.ஞானமூர்த்திபக். 282

[4] வுயஅடைடநஒi;உழn எழட.i;ள.P. 2363

[5] இலக்கியத்திறனாய்வியல், தா.ஏ.ஞானமூர்த்தி, 283-284

[6] துழாn எயn னசரவநn pடயலறசi;பாவயளடழ PP 30-3